திருப்பூர்-பழனி இருப்புப்பாதை

* 198 வினு—திருமதி வி.ப. பழனியம்மாள் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரலிருந்து தாராபுரம் வழியாக பழனி செல்லுவதற்கு இருப்புப் பாதை அமைக்க, மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சிபாரிசு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்விதத் திட்டம் எதுவும் மாநில அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, அநேக ஆண்டு களாக தாராபுரம் வட்டத்து மக்கள் எங்களுடைய பகுதிக்கு ரயில் பாதை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனியாவது அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற கோரிக்கை வந்தால் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

சாத்தியாறு அணைக்கட்டு.

* 199 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மவரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவிலுள்ள சாத்தி யாறு அணைக்கட்டு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்கிற வேண்டு கோள் ஏதனும் அரசாங்கத்துக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) ஆம்.

(இ) இந்த வேண்டுகோள் ஆய்ந்ததில் சாத்தியாறு ஓடை நீர்த் தேக்கத்தின் ஆயக்கட்டை விரிவுபடுத்துவது இயலாதென்று கண்டறியப் பட்டது.

கதர் கிராமத் தொழில் வாரியம்

* 200 வினு—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசாங்கத்தின்கீழ் இயங்கும் கதர் போர்டில் எல்லா அரசியல் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க சர்க்கார் உத்தேசித் துள்ளதா ?

(இ) தற்போதைய கதர் போர்டில் எந்தெந்த அரசியல் கட்சியினர் அங்கம் வகிக்கின்றனர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) தமிழக அரசின் கீழ் இயங்கும் கதர்-கிராமத் தொழில் வாரியத் தில், அரசியல்கட்சி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, கதர் உற்பத்தியிலும், வளர்ச்சியிலும், அல்லது கிராமத் தொழில் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அரசாங்கச் சார்பற்றவர்களும் அரசாங்க அதிகாரிகளும் மேற்படி வாரியத்தில் பணியாற்றும் வண்ணம் உறுப்பினர்களாக அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கொ. இரா. ஞானசம்மந்தன் : அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் வர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா அல்லது அதிலே அனுபவமும் அக்கறையும் கொண்ட வர்கள் என்ற அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதற்கான விளக்கந்தான் தரப் பட்டது. அரசியல் கட்சி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. கதர்த் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள், கதர்த் துறையை வளர்க்க வேண்டு